**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 207 நாள்: 15.06.2026

**மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு-103, 106 மற்றும் 107க்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து சந்திப்பு மற்றும் சாலை மையத்தடுப்பு மேம்பாடு, கால்வாய் மேம்பாடு, கட்டடப் பணி, விளையாட்டுத் திடல், பூங்கா, அம்மா உணவகம், வார்டு அலுவலகக் கட்டடம் உள்ளிட்ட வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.06.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், அண்ணாநகர் மண்டலம், வார்டு-103க்குட்பட்ட அண்ணா வளைவு சந்திப்பு பகுதியினை மேம்படுத்துதல், அங்குள்ள சாலை மையத்தடுப்பினை அழகுப்படுத்தும் வகையில் செடிகள் நட்டு பராமரித்தல் தொடர்பாகவும், வார்டு-107க்குட்பட்ட நெல்சன் மாணிக்கம் சாலையில் மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணிகள், அங்குள்ள கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகள், மேத்தா நகரில் உள்ள விளையாட்டுத் திடலில் உள்ள விளையாட்டு உபகரணங்களின் செயல்பாடுகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்தும், கலெக்டரேட் காலனியில் உள்ள அம்மா உணவகத்தில் உணவு தயாரிக்கும் இடம், உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் பதிவேடுகள், உணவின் தரம் குறித்து உணவருந்தி ஆய்வு செய்தார். அங்கு வரும் பொதுமக்களிடம் வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து, கோவிந்தன் தெருவில் உள்ள வார்டு அலுவலகக் கட்டடம் மற்றும் அப்பகுதியில் கட்டப்பட்டு வரும் தூய்மைப் பணியாளர்களுக்கான கட்டடம், வார்டு-106க்குட்பட்ட அமைந்தகரை, இரயில்வே காலனி பூங்காவில் உள்ள கழிப்பறை, விளையாட்டு உபகரணங்கள், அமரும் இருக்கைகள், செயற்கை நீரூற்று உள்ளிட்டவற்றை ஆய்வு செய்து, பூங்காவிற்கு வரும் பொதுமக்களிடம் அடிப்படை வசதிகள் குறித்து கலந்துரையாடி கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, வட்டார துணை ஆணையாளர் அவர்கள் வளர்ச்சித் திட்டப் பணிகளை விரைந்து முடித்திடவும், சாலைகளை தூய்மையாக பராமரித்திடவும், அம்மா உணவகத்தில் தரமான உணவினை மக்களுக்கு வழங்கிடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது, மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:** இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.